12th March 1965]

Firing incident at refugee camp near Coimbatore

* 214 *Q.*—SRI M. KALYANASUNDARAM :
SRI M. V. KARIVENGADAM :
SRI A. KUNJAN NADAR : } Will the Hon the Chief Minister be pleased to state—

(*a*) the circumstances under which a police constable opened fire, killing one refugee and injuring another at the refugee camp near Coimbatore on 13th December 1964;

(*b*) the details of allegations made by the inmates of the camp; and

(*c*) whether a copy of the findings of the Revenue Divisional Officer who enquired into the incident, will be placed on the Table of the House?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Alleging that an armed police constable misbehaved with a woman inmate, a crowd of 70–80 East Pakistan Refugees lodged at Sanganur Camp surrounded the guard room and attacked the sentry constable with stones and brick-bats, causing injuries. When the crowd did not pay heed to his warnings and appeal to disperse, he opened fire in self-defence and to protect the arms and ammunitions in the Guard room.

(*b*) The inmates alleged that when they tried to contact the officers over phone to inform them of the constable's misbehaviour, the policeman on duty told them that he would arrange to inform the officers and when they were returning to the camp, the police opened fire on them.

(*c*) The Revenue Divisional Officer's enquiry report in respect of the incident is under the consideration of Government.

திரு. செ. மாதவன் : இந்த விசாரணை நடைபெற்றது. விசாரணை நடந்தபோது இந்த நிகழ்ச்சிகளுக்குக் காரணம் மிஸ்பிஹேவியர் என்று சொல்லுகிறார்கள். இந்த மிஸ்பிஹேவியர் எந்த இடத்தில் நடந்தது என்று தகவல் வந்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதெல்லாம் ஆர்.டி.ஓ. ரிபோர்ட்டில் இருக்கிறது. வேறு தகவல் என்னிடம் இல்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் பயனாக இவர்கள் எல்லாம் இந்த இடத்தைவிட்டுப் போய்விட்டார்கள் என்பது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. செ. மாதவன் : அங்கே இருக்கிற போலீஸ்காரர்களும் அரசாங்க நிர்வாகிகளும் பயன்படுத்தப்பட்ட மொழி புரியாத காரணத்தினால்தான் இந்தத் தகராறு ஏற்பட்டது என்பது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ரிபோர்ட்டைப் பரிசீலனை செய்து பார்த்தால்தான் நிலைமை புரியும்.

திரு. ராம. அரங்கண்ணல் : சம்பவம் நடந்த இடத்திற்கு ஹோம் மினிஸ்டர் சென்றிருந்தார்களா ? ஆறுதல் ஏதாவது கூறினார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஹோம் மினிஸ்டர் என்ன செய்தார்கள் என்பதெல்லாம் இந்தக் கேள்வியில் எழவில்லை.

திரு. செ. மாதவன் : உள்துறை அமைச்சர் விசாரித்தார்களா ? அப்படி விசாரித்ததில் உண்மைகள் புலப்பட்டனவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உள்துறை அமைச்சர் விசாரிப்பதற்குப் போகவில்லை. சட்டப்படி ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர் தான் என்கொயரி நடத்தினர்.

பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சிப்பள்ளி (புதுக்கோட்டை)

* 215 கேள்வி.—**திரு. பி. முருகையன் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

புதுக்கோட்டையில் பெண்களுக்குத் தனியாக ஆசிரியர் பயிற்சிப்பள்ளி ஒன்று ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.

திரு. பி. முருகையன் : தாராபுரத்திலும், தஞ்சையிலும் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப்பள்ளிகள் இருக்கின்றன. அந்தப் பயிற்சிப்பள்ளிகளில் சேருவதற்கு இட நெருக்கடி காரணமாக அதிகமாக மாணவிகளைச் சேர்ப்பதற்கில்லை. ஆகையால் புதுக்கோட்டையில் பெண்கள் ஆசிரியர்கள் பயிற்சிப்பள்ளி ஏற்படுத்த இனிமேலாவது அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பெண்கள் பயிற்சிப்பள்ளிகள் ஆரம்பிப்பதற்கு எவ்வளவு பேர்கள் தேவையோ அந்த அளவிற்குத்தான் பள்ளிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்போது வேறு அமைப்பதற்கு உத்தேசம் இல்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : பெண்கள் ஆசிரியர் பயிற்சிப்பள்ளியிலே ஓரளவிற்கு நல்லவிதமாகப் பாடம் சொல்லிக்கொடுக்கிறார்கள் என்பதை எல்லோரும் உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே ஆண்கள் பயிற்சிப்பள்ளிகளைவிட பெண்கள் பயிற்சிப்பள்ளிகளை அதிகமாக அமைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆண்கள் பயிற்சிப்பள்ளிகளும் பெண்கள் பயிற்சிப்பள்ளிகளும் எந்த அளவுக்கு வேண்டியிருக்கிறதோ அந்த அளவிற்குப் போதிய பள்ளிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

Super Power Grid for south

* 216 *Q*.—SRI M. KALYANASUNDARAM : SRI K. A. MATHIALAGAN : } Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether a copy of the recommendations made at the Conference convened by the Union Minister for Irrigation and Power at Bangalore in October 1963 on the establishment of a Super Power Grid for the south has been received; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) The Southern Regional Electricity Board has been inaugurated on the 10th July 1964 and is functioning at Bangalore with a Member-Secretary.